# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## தொலைத்தொடர்பு, டிஜிற்றல் உட்கட்டமைப்பு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# விசேட EPS-TOPIK பற்றிய அறிவித்தல்

வேலைக்கு ஆட்களை அனுப்புவதற்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கும், கொரியக் குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சுக்குமிடையிலான (MOEL) புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட வாசகாலப் பகுதியில், சுயவிருப்பின்பேரில் தாயகம் திரும்பி மீண்டும் கொரியா செல்ல விரும்புவோருக்கு மேற்படி EPS-TOPIK பரீட்சை நடாத்தப்படுகின்றது. கொரியாவின் வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திர முறைமையின் கீழ், வேலைவாய்ப்புப் பெறவிரும்பவோர், கொரிய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சினால் (MOEL) அங்கீகரிக்கப்பட்டு, கொரிய மனிதவள மேம்பாட்டு சேவையினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற EPS-TOPIK பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும், அத்தோடு இப்பரீட்சையில் சித்தியெய்தியோர் மாத்திரமே EPSக்கான தொழில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும் முடியும்.

**ஜுலை 16, 2018**

**நடாத்தப்படுவது: கொரியக் குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சு**
**அமுல்செய்யப்படுவது: கொரிய மனிதவள அபிவிருத்தி சேவைகள்**
**ஒருங்கிணைப்பு:வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**
**மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE)**

## 1. பரீட்சை நேரசூசி

| பதிவுக்காலம் | பரீட்சைத் திகதி அறிவிப்பு | பரீட்சைக் காலம் | பரீட்சைப் பெறுபேறுகள் வெளியீடு | வயதெல்லை |
|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 1~3 | ஆகஸ்ட் 31 | செப்டம்பர் 12~ | அக்டோபர் 1 | ஆகஸ்ட் 2, 1978 ~ ஆகஸ்ட் 1, 2000 |
| * EPS நிலைவரங்களுக்கேற்ப பரீட்சை நேரசூசி மாறுபடலாம் | | | | |

## 2. (அனுமதிக்கப்பட்ட) கைத்தொழிற்றுறையின் வகை: உற்பத்தி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, நிர்மாணம், மீன்பிடி, சேவைகள்

* தான் கடைசியாக ஒரு வருடத்துக்கும் மேற்பட்ட காலம் வேலைபார்த்த நிறுவனத்திடமிருந்தான சிபாரிசின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் இந்நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தமக்கான துறைகளை கவனமாகத் தேர்வு செய்ய வேண்டும்.

## 3. சித்தியெய்துவோரின் (எதிர்பார்க்கப்படுவோரின்) எண்ணிக்கை: அறிவிக்கப்படும்

எந்தவொரு தொழிற்றுறையிலும், மொத்தப் புள்ளிகளான 200 புள்ளிகளில் 80 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றவர்களில் சித்தியெய்த எதிர்பார்க்கப்படுவோரின் எண்ணிக்கை பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பின்னர் அறிவிக்கப்படும்.

## 4. பரீட்சை நடைபெறுமிடமும் திகதியும்

பரீட்சை நடைபெறுமிடம் : CBT (கணனி அடிப்படையிலான பரீட்சை) பரீட்சை மண்டபம், இல 205, தெபானம, பன்னிப்பிட்டிய

அறிவிக்கும் முறை
- EPS-TOPIK இணையம்(http;//www.epstopik.hrdkorea.or.kr)
- SLBFE இன் அறிவித்தல் பலகை (www.slbfe.lk)

## 5. தகைமைகள்

* அங்கீகரிக்கப்பட்ட வாசகாலப் பகுதிக்கு முன்னதாக சுயவிருப்பின் பேரில் நாடு திரும்பி மீள தொழில் பெற விரும்புவோர் (மீளத் திரும்பிய காலம் 2010 ஜனவரி 1 ஆம் திகதிக்கு முன்னதாக இருத்தல் கூடாது)
* 18 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்டோர்
* எந்தவிதமான கடுமையான தண்டனைகளோ அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறைவாசமோ அனுபவிக்காதவர்கள்
* கொரியக் குடியரசினால் வெளியேற்ற உத்தரவு அல்லது நாடுகடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்படாதவர்கள
* சொந்த நாட்டிலிருந்து வெளியேறத் தடை விதிக்கப்படாதவர்கள்
* கொரியாவில் E-9 மற்றும் E-10 வீஸா நடைமுறைகளில் 5 வருட தங்குகையைக் கொண்டிராதவர்கள்
* குடிவரவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் சீராக்கல்களுக்கு முன்பாக நாடுதிரும்பியவர்கள், கொரியாவில் ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட வருடங்கள் தங்கியிருப்பின் விண்ணப்பிக்கத் தகைமையுடடையோரின் பெயர்ப்பட்டியலில் இடம்பெறுவர். இருப்பினும் போதிய தகைமையின்மையால் அந்நபர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவார்.

## 6. பதிவு செய்யும் நடைமுறைகள்

- காலம்: நவ 1~3, 2018 (3நாட்களுக்கு)
- இடம்: SLBFE கேட்போர் கூடம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை.
- பதிவு நடைமுறைகள்: பிரத்தியேகமாக விஜயம் செய்வதன் மூலம் பதிவு செய்தல்:
- SLBFE இணையதளத்தில் (www.slbfe.lk) உங்கள் பிறந்த திகதியைப் பதிவுசெய்து நீங்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவரா என்பதை சரிபாருங்கள்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

- நாடு திரும்பியதைக் குறிக்கும் கடவுச்சீட்டின் பிரதி (அவர் / அவள் சுய விருப்பின் பேரில் நாடு திரும்பியமையை நிரூபிக்க)
- விண்ணப்பப் படிவம் (பரீட்சை கட்டணங்களைச் செலுத்திய பரீட்சார்த்திகளுக்கு மட்டும் விண்ணப்பப் படிவங்கள் பதிவு நடைபெறுமிடங்களில் இலவசமாக வநியோகிக்கப்படும்
- ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திலும் விண்ணப்பப் படிவு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப் படிவத்தை மாத்திரமே பெறவோ சமர்ப்பிக்கவோ முடியும். அதில் ஏதேனும் தவறுகள் ஏற்படின் அழிப்பானால், அழிக்கும் திரவத்தினால் திருத்தி சமர்ப்பிக்க முடியும்
- கடவுச்சீட்டின் பிரதி (கடவுச் சீட்டின் மூலப் பிரதியின் 75 சதவீதமாக)
- 6 மாதகாலப் பகுதிக்குள் எடுக்கப்பட்ட புகைப்படம் (தொப்பியில்லாத முழுமையான முகம் முற்புறத் தோற்றம், வெள்ளை மற்றும் வெளிர் வெள்ளைப் பின்னணி)
- ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடவுச்சீட்டின் பிரதி (குறிப்பாகப் பெயர்) இணைக்கப்பட வேண்டும்.

**பரீட்சைக் கட்டணம்: 24 அமெ. டொலர் (ரூ. 3,846.00)**

* பதிவு நடைமுறைகள் இடம்பெறும் காலங்களில், தவிர்க்க முடியாத காரணங்களினால் தங்கள் பதிவை ரத்துச் செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்கள் செலுத்திய பணம் முற்றுமுழுதாக திருப்பிக் கொடுக்கப்படும். (இருப்பினும் ரத்துச் செய்ததன் பின்னர் மீளப் பதிவு செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.)
* ரசீதின் அடிப்படையிலேயே பதிவு நடைமுறைகள் இடம்பெறுமாகையால் அதிகளவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து, மேலதிக பரீட்சைத் திகதிகள் தீர்மானிக்கப்படும். ஒவ்வொரு பரீட்சார்த்தியினதும் பரீட்சைத் திகதியும் இடமும் அறிவித்தல் தினத்தில் வெளியிடப்படும்.
* HRD Korea மீள்குடியேற்ற ஆதரவுத் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்பதன் பயன்கள்.

மீள்குடியேற்ற ஆதரவுத் பயிற்சித் திட்டம் (ஆகக்கூடியது 25 புள்ளிகள்)

| வருடம் | TOPIK மட்டம் I 3 கற்கைநெறி (ஆகக் கூடுதலாக 20 புள்ளிகள்) | | தொழில்வாய்ப்புக்கான பயிற்சிகள் / வியாபாரம் ஆரம்பித்தல் (ஆகக் கூடுதலாக 5 புள்ளிகள்) |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்தல் | TOPIK மட்டம் 3 அல்லது அதனிலும் கூடுதலாக சித்தியெய்தியோர் | பூர்த்தி செய்தல் |
| 2016 | - | மேலதிக புள்ளிகள் (20 புள்ளிகள்) பரீட்சைக் கட்டண விலக்களிப்பு | |
| 2017 இன் பின்னர் | மேலதிக புள்ளிகள் (5 புள்ளிகள்) பரீட்சைக் கட்டண விலக்களிப்பு | | மேலதிக புள்ளிகள் (5 புள்ளிகள்) |

* கொரியாவில் நீங்கள் மிள்குடியேற்றத் திட்டத்தினைப்பூர்த்தி செய்திருந்தால், விண்ணப்பப் படிவத்தையும், சான்றிதழையும் சமர்ப்பியுங்கள் (இணைப்பைப் பாருங்கள்)
* TOPIK 3 ஆம் மட்டத்தையே அல்லது அதற்கு மேற்பட்ட மட்டங்களையோ பூர்த்தி செய்திருந்தால், அதன் சான்றிதழை மாத்திரம் சமர்ப்பியுங்கள். அத்துடன் கொரிய கல்வி செயன்முறை சான்றிதழையும் அனுப்புங்கள்

## 7. பரீட்சை சாராம்சம் : செப்டம்பர் 12, 2018 ~

* பரீட்சை கட்டமைப்பும் பிரிவும்

| கேள்வி மாதிரி | கேள்விகளின் எண்ணிக்கை | மொத்தப் புள்ளிகள | கால அவகாசம |
|---|---|---|---|
| வாசிப்பு | 20 | 100 | 25 நிமிடம் |
| கேட்டல் | 20 | 100 | 25 நிமிடம் |
| மொத்தம் | 40 | 200 | 50 நிமிடம் |

* பரீட்சைக்கான கால அவகாசம்

| பரீட்சை அமர்வுகள் | பரீட்சை வளாகச் சந்திப்புக்கள் | பரீட்சைக்கான தயார் நிலை | கால அவகாசம் | |
|---|---|---|---|---|
| | | | வாசிப்பு (25நிமி) | கேட்டல் (25நிமி) |
| 1வது அமர்வு | 09:20~09:30 | 09:30~10:00 | 10:00~10:25 | 10:25~10:50 |
| 2வது அமர்வு | 10:50~11:00 | 11:00~11:30 | 11:30~11:55 | 11:55~12:20 |
| 3வது அமர்வு | 13:20~13:30 | 13:30~14:00 | 14:00~14:25 | 14:25~14:50 |
| 4வது அமர்வு | 14:50~15:00 | 15:00~15:30 | 15:30~15:55 | 15:55~16:20 |
| * பரீட்சைக்கான தயார் நேரத்துக்கு முன்பாக பரீட்சார்த்திகள் மண்டபத்தில் அமர வேண்டும் | | | | |

* பரீட்சை கட்டமைப்பும் புள்ளி வழங்கலும் தேர்ச்சிக்கான தராதரங்களும்
  - பல்தேர்வு வினாக்கள் (MCQ)
  - வாசிப்பு மற்றும் செவிமடுத்தல் பரீட்சைகள் எந்தவித இடைவேளையுமின்றி தொடர்ச்சியாக நடாத்தப்படும்.
* சகல வினாக்களும் EPS-TOPIKக்கான THE STANDARD TEXT book இலிருந்து எடுக்கப்படட மூடிய வினாத் தொகுப்பிலிருந்து பெறப்பட்டவை.
* பரீட்சை தினத்தில் பரீட்சார்த்திகள் தயார்ப்படுத்த வேண்டியவை
  - பரீட்சை அனுமதிச் சீட்டு
  - கடவுச்சீட்டு
  * தங்கள் விண்ணப்பப் படிவங்களோடு இணைத்த கடவுச் சீட்டு பிரதிக்கான மூலக் கடவுச் சீட்டை சகல விண்ணப்பதாரிகளும் கொண்டு வருதல் அவசியம்
  * எந்தவொரு பரீட்சார்த்தியும் கடவுச் சீட்டின்றி பரீட்சை எழுத அனுமதிக் கப்பட மாட்டார்கள்

## 8. பரீட்சை முடிவுகள் அறிவிப்பு

* அக்டோபர் 01, 2018
* அறிவிக்கப்படும் விதங்கள
  - SLBFEயின் அறிவித்தல் பலகை (www.slbfe.lk)
  - வேலைவாய்ப்பு அனுமதி முறைமைகள் இணையத்தளம் (http://www.eps.go.kr)
  - EPS-TOPIK இணையத்தளம் (http://epstopik.hrdkorea.or.kr)
* பரீட்சை பெறுபேறுகள் செல்லுபடியாகும் காலம் 2 வருடங்கள் (பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானது முதல்)

## 9. ஏனைய தகவல்கள்

* விண்ணப்பதாரி சுயவிருப்பின்பேரில் மீளத் திரும்பியவர் அல்ல என்பது கண்டு பிடிக்கப்படின் அவரது பரீட்சைப் பெறுபேறுகள் இரத்துச் செய்யப்படும் விண்ணப்பதாரியே அதற்கான முழுப்பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.
* பரீட்சையில் தேறியவர்கள், வேலைக்கான பதிவு மற்றும் வேலைவாய்ப்பு போன்ற குறுகிய மீள உட்புகும் நடைமுறைகளால் நன்மைய டைவதோடு, உட்புகுவதற்கு முன்னரான பயிற்சிகளில் இருந்தும் விலக்களிக்கப்படுவர்.
* பரீட்சை நடைபெறுமிடத்தில் மொபைல் தொலைபேசிகள், ஒலிப்பேழைகள், PDA,MP3 கள், இலத்திரனியல் அகராதிகள், மற்றும் எனைய இலத்திரனியல் உபகரணங்கள் என்பனவற்றை பரீட்சார்த்திகள் கொண்டுவருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாறாக இவற்றைப் பயன்படுத்தும் பரீட்சார்த்திகள் ஏமாற்றுபவர்களாகக் கருதப்படுவர்.
* அவ்வாறான ஏமாற்று வேலைகளில் ஈடுபவது கண்டுபிடிக்கப்படுமிடத்து, அந்நபர் முன்று வருடங்களுக்கு EPS-TOPIK பரீட்சைக்குத் தோற்றும் தகைமையை இழக்கின்றார்
* பரீட்சார்த்திகளின் தனிப்பட்ட விபரங்கள் அவரது கடவுச் சீட்டிலுள்ள விபரங்களுடன் ஒத்துப் போகவில்லையெனின், (பெயர், பிறந்த திகதி, பால்) EPS வேலை தேடுவோர் பெயர்ப்பட்டியலில் இருந்து குறிப்பிட்ட நபரின் பெயர் நீக்கப்படுவதோடு, அவர்கள் கொரியாவுக்கு நுழைய எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டார்கள், தங்களது தனிப்பட்ட விபரங்களில் ஏற்பட்ட வேறுபாடுகளுக்கு பரீட்சார்த்திகளே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.
* கொரிய மொழியில் தேர்ச்சியை கூட்டிக்கொள்ள, The Standard Text book for EPS- Topik" இன் அடிப்படையில் இருந்து மூடிய தொகுதி வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்படும்.

"The Standard Textbook for EPS-TOPIK" கீழ்வருமாறு இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுள்ளது. விண்ணப்பதாரிகள் அவற்றை இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.

| < நியம அப்பியாசப் புத்தகத்தை பதிவிறக்கம் செயவதற்கான இணையத் தளங்கள் > | | |
|---|---|---|
| **பிரிவு** | **உள்ளடக்கம்** | **இணையத்தள முகவரி** |
| HRD Koreaவின் முகப்புப் பக்கம் | புத்தக வடிவம் (PDF, ஒலி வடிவம்) | http://www.hrdkorea.or.kr/3/3/3/1/2 |
| EPS-TOPIK இன் முகப்புப் பக்கம் | புத்தக வடிவம் (PDF, ஒலி, வடிவம்) | http://epstopik.hrdkorea.or.kr |
| **குறிப்பு:** EPS-TOPIK: இன் கணனி அடிப்படையிலான செயற்பாடுகளுக்கான இணையப் பக்கமொன்றுள்ளது<br>* URL: epstopik.hrdkorea.or.kr ® English homepage ® Experience | | |

* EPS-TOPIK இல் சித்திபெறுவதால் மட்டும், கொரிய வேலைவாய்ப்புக்கான உத்தரவாதம் கிடைத்துவிடாது, வேலைக்கான விண்ணப்பம் பதிவு செய்யப்படுதலை மாத்திரமே அது உத்தரவாதப்படுத்தும்
* மருத்துவ பரிசோதனைகளில் தோற்றுப் போனதால் கொரியா செல்லும் அனுமதி மறுக்கப்பட்டவர்கள், சட்ட விரோதமாக கொரியாவில் சிறிதுகாலம் தங்கியவர்கள் வேலைவாய்ப்புக்குத் தகுதியுடையவர்களாகக் கருதப்பட மாட்டார்கள்
* கொரியாவுக்குச் சென்றதன் பின்னர் ஊக்கமருந்து சோதனையில் நீங்கள் தவறியிருப்பின் மீண்டும் உங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்.
* கொரியக் குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சுக்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு நலன்புரி அமைச்சுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன் படிக்கையின் பிரகாரம் தொழிலாளர்களை கொரியாவுக்கு அனுப்பும் சட்டபூர்வ உரிமையை "SLBFE" மட்டுமே கொண்டிருக்கிறது.EPS- TOPIK சித்தி பெற்றவர்களும், SLBFE வின் நிரலில் தங்களைப் பதிவு செய்தவர்களையும் மட்டுமே கொரியா வேலைக்கமர்த்திக் கொள்ளும். கொரியாவுக்கு வேலைப் படையை அனுப்பும் பணியில், வேறு தனியார் நிறுவனங்கள் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்படின், அந்நிறுவனங்கள் சட்ட ரீதியாகத் தண்டிக்கப்படும்.
* EPS-TOPIK பரீட்சைக்குத்தோற்ற ஒரு விண்ணப்பதாரிக்கு 24 அமெரிக்க டொலர்கள் (ரூ.3,846.00) மட்டுமே தேவைப்படும், கொரியாவுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்புவதற்கான உத்தியோகபூர்வத் தொகையாக தங்களைப் பதிவுசெய்யும்போது வேலைதேடுவோர் செலுத்தும் தொகையாக இது உள்ளது. EPS முறைமையின் மூலம் வேலை பெற்றுத் தருவதாகக் கூறப்பட்டு, எந்த தனிநபராலோ அல்லது SLBFE தவிர்ந்த வேறேதாவது நிறுவனத்தாலோ பணம் அறவிடப்படுவது குறித்து அனைத்து விண்ணப்பதாரிகளும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

(இணைப்பு)

## மீள்குடியேற்ற பயிற்சி மற்றும் கல்வி என்பவற்றில் இருந்தான மேலதிகப் புள்ளிகள் மற்றும் விண்ணப்ப கட்டண விலக்களிப்பு

**விண்ணப்பதாரியின் உறுதிமொழி**

EPS-TOPIK க்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுகையில் ஏதாவது தவறான மீள்குடியேற்றப் பயிற்சி நடைமுறைகள் மற்றும் கல்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவது தொடர்பில், நான் முழுமையான சட்டரீதியான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கிறேன் என்று இத்தால் அறியத் தருகின்றேன்.
விண்ணப்பதாரியின் ஆவணங்கள் எவையம் தவறானவை, அல்லது போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவரது பரீட்சைப் பெறுபேறுகள் செல்லுபடி யற்றதாக்கப்படுவதோடு, அவர் 3 வருடங்கள் அவர் EPS-TOPIK க்கு தோற்றவும் முடியாது.

**விண்ணப்பதாரி பூர்த்திசெய்ய வேண்டும்**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | பதிவிலக்கம் | |
| பிறந்த திகதி | | கடவுச்சீட்டு இலக்கம் | |
| பால்நிலை | | தொடர்பு இலக்கம் | |
| மீள்குடியேற்ற ஆதரவுப் பயிற்சிகள் | | * தகைமைக்கான புள்ளி ( ○ ) | |
| கொரிய கல்வி நடைமுறை<br>(ஆகக் கூடுதலாக 20 புள்ளிகள் | | • கொரிய கல்வி நடைமுறையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு 2016 இல் பூர்த்தி செய்தவர்களுக்கல்ல. ( ○ ) | |
| | | • கொரிய கல்வி முறைமைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் TOPIK மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தை பூர்த்தி செய்தல் ( ○ ) | |
| ஆரம்பம் மற்றும் வேலைவாய்ப்புக்காக தொழிற்பயிற்சி (ஆகக்கூடுதலாக 05 புள்ளிகள்) | | • வேலை மற்றும் ஆரம்பம் என்பனவற்றுக்கான தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்காக ( ○ ) | |

20___ / ___ / ___ (வவவவ/மாமா/திதி)

பெயர்:................................................ (கையொப்பம்)

President of HRD கொரியா தலைவர்

**தலைவர்**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
**234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**
**தொலைபேசி:** 011-2864101 – 105 / 011-2880500
**இணையதளம்:** www.slbfe.lk